# முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.

## MCOP. No.129/2023

2026–ம் வருடம் பிப்ரவரி திங்கள் 10–ம் நாளன்று மனுதாரர் தரப்பு சாட்சியாக ம.சா.1வது நபரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 54 விதியின்படி 95வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி) திருமதி.இந்துமதி, உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: பழனியம்மாள்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 1 ஆம் மனுதாரர் ஆவேன். என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அது என்னுடைய தகவலின் பேரில் தயாரிக்கப்பட்டு, அதை நான் படித்து பார்த்து கையெழுத்திட்டேன். முதல் தகவல் அறிக்கை கணிணி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.1. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மருத்துவ ரசீதுகள் ரூ.2,30,456/– அசல் ம.சா.ஆ.2. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கோவை கங்கா மருத்துவமனையில் வழங்கிய சிகிச்சை விபரக் குறிப்பு அசல் ம.சா.ஆ.3. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கோவை கங்கா மருத்துவமனையில் வழங்கிய காயச் சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.4. ஆக குறியீடு செய்யப்படுகிறது. சரவணா மருத்துவமனையில் வழங்கிய சிகிச்சை

விபரக் குறிப்பு அசல் ம.சா.ஆ.5. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை வழங்கிய காயச் சான்றிதழ் கணிணி பதிவிறக்க நகல் ம.சா.ஆ.6. ஆக குறியீடு செய்யப்படுகிறது. கரூர் அரசு மருத்துவ கல்லூரி வழங்கிய சிகிச்சை விபரக் குறிப்பு அசல் ம.சா.ஆ.7. ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறப்பு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.8. ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாரிசு சான்றிதழ் நகல் ம.சா.ஆ.9. ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்துபோன ராமசாமி என்பவரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.10. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.11. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.12. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.13. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.14. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.15. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.16. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.17. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 4 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.18. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5ம் மனுதாரரின் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.19. ஆக குறியீடு செய்யப்படுகிறது. 5 ஆம் மனுதாரரின் வங்கி கணக்கு புத்தகம் நகல் ம.சா.ஆ.20. ஆக குறியீடு செய்யப்படுகிறது. மனுப்படி உத்திரவாக வேண்டுகிறேன்.

**2 ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்துபோனவர் என் கணவர். விபத்தை நான் நேரில் பார்த்தேன் எங்கள் வீட்டிற்கு அருகில் தான் விபத்து ஏற்பட்டது. காவல்நிலையத்தில் நீங்கள் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான் நானும் என் கணவரும் மருத்துவமனையில் இருந்த போது காவலர்கள் வந்து புகார் பெற்றுக்கொண்டனர். விபத்திற்கு பின்பு 6 மாதம் தொடர் சிகிச்சையில் இருந்து அதன்பிறகு என் கணவர் இறந்துவிட்டார். என் கணவரை மருத்துவமனையிலிருந்து மருத்துவசிகிச்சைக்கு பிறகு குணமாகி விடுவிக்கப்பட்டார். வீட்டிற்கு வந்த பிறகும் என் கணவர் 6 மாதம் வீட்டிலேயே நினைவில்லாமல் படுத்தேதான் இருந்தார். என் கணவர் கங்கா மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு அவரை வீட்டில் வைத்து தொடர்ந்து மருத்துவ சிகிச்சை கொடுத்துக்கொண்டிருந்தோம். உங்கள் கணவர் வீட்டில் நினைவில்லாமல் இருந்தார் என்பதற்காக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். மருத்துவர் வீட்டில் வந்து சிகிச்சை பார்ப்பார். என் கணவருக்கு அப்போது நினைவு வரும் போகும். விபத்து சமயத்தில் என் கணவருக்கு 73 வயது. என் கணவர் வீட்டில் சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தபோது கொடுமுடி சரவணா மருத்துவமனையில் 40 நாட்கள் தொடர் மருத்துவ சிகிச்சை பெற்றார். எந்த தேதியில் அவ்வாறு மருத்துவ சிகிச்சை பெற்றார் என்று ஞாபகமில்லை. விபத்தில் உங்கள் கணவர் தான் அஜாக்கிரதையாக சென்றபோது தான் விபத்து நடந்தது என்றால் சரியல்ல என் கணவர் வீட்டிற்கு அருகில் நின்று கொண்டிருந்தபோது தான் விபத்து

ஏற்பட்டது. காவல்துறையினர் விபத்து குறித்து என்னை மருத்துவமனையிலிருந்த போது விசாரித்தார்கள். நீங்கள் தாக்கல் செய்துள்ள மருத்துவ ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டுள்ளவை என்று சொன்னால் சரியல்ல. என் கணவர் இறந்தபிறகு பிணக்கூறாய்வு செய்யவில்லை வீட்டில் தான் இறந்தார். விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கும் உங்கள் கணவர் இறப்பிற்கும் காரணம் இல்லை என்றால் சரியல்ல விபத்திற்கு முன்பு என் கணவர் நன்றாகத்தான் இருந்தார் விபத்திற்கு பின்னிட்டு தான் இறந்துவிட்டார். பிணக்கூறாய்வு செய்தால் எந்த காரணத்திற்காக உங்கள் கணவர் இறந்தார் என்று தெரிந்துவிடும் என்பதால் பிணக்கூறாய்வு செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்கள் கணவர் இறப்பிற்கும் விபத்து காயங்களுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வயது மூப்பின் காரணமாகத்தான் நோய்வாய் பட்டு உங்கள் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரியல்ல. உங்கள் கணவர் இழப்பால் உங்களுக்கு எந்த வருமான இழப்பும் ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் தற்போது தனியாகத்தான் இருக்கிறேன். நீங்கள் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றும் உங்கள் கணவரின் வருமானம் குறித்து நீங்கள் வழக்கில் நிரூபிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN Digitally signed by ELAVAZHAGAN Date: 2026.02.10 17:20:13 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.